நமது ஆவிக்குரிய
போராயுதங்கள்

நமது தேவனுக்கு செலுத்துகிறேன். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வெற்றி நமக்கு கிடைக்கிறது.[1]

பிசாசின் தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும், வெற்றியுடன் முறியடிப்பதற்கு தேவனுடைய சர்வாயுதங்கள் அணிந்துகொள்கிறேன். எனது மல்யுத்தம் ஊன் உடலோடும், மாம்சத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும், இவ்வுலகின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளுடன் உள்ளது. சர்வ வல்லமையுள்ள தேவனே என் உதவியாளர்.[2]

நான் மனிதனில் என் நம்பிக்கையை வைக்கமாட்டேன்.[3]

பிசாசின் பொய்களை வெளிச்சம் போட்டுக்காட்டும்படி[5] சத்தியத்தை இடைக்கச்சையாக இருக்கக் கட்டிக்கொண்டு ஒளியில் நடக்கிறேன்.[4]

நீதியின் கவசத்தில் என் அகத்தைப் பாதுகாக்கின்றேன்.6 இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தில் நான் தேவனுக்கு முன்பாக நீதிமான் ஆக்கப்பட்டுள்ளேன்.[7]

தேவ சமாதானத்தின் ஆயத்தம் என்னும் காலணிகளை என் கால்கள் அணிந்துள்ளன.[8] விசுவாசம் என்னும் கேடயத்தைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளை அணைக்கின்றேன்.[9]

மீட்பின் நம்பிக்கைகளைத் தலைச்சீராவாக அணிந்து எனது மனதையும் எண்ணங்களையும் பாதுகாக்கிறேன்.[10] என்னைப் பற்றி தேவனுடைய திட்டம் வளமான வருங்காலத்தையும், நம்பிக்கையையும் தருகிறது.[11]

ஆவியின் பட்டயமாகிய தேவ வசனம் எனது போராயுதம்.[12] அதைக்கொண்டு குதர்க்க வாதங்களையும் தேவ அறிவிற்கு எதிராகத் தலைதூக்கும் அனைத்து மேட்டிமையையும் தகர்த்தெறிகிறேன்.[13] எல்லாச் சமயங்களிலும் பிரார்த்தனையோடும் ஆவியினால் விண்ணப்பத்தோடும் பொறுமையுடன் பாரத்துடன் அனைத்து விசுவாசிகளுக்காவும் ஜெபிக்கிறேன்.[14]

அவரில் நான் வெற்றி மேல் வெற்றியடைகிறேன்.![15]

[1] 1 கொரிந்தியர் 15:57
[2] எபேசியர் 6:11–18
[3] சங்கீதம்118:8
[4] எபேசியர் 6:14
[5] யோவான் 8:44; எபேசியர் 5:11
[6] எபேசியர் 6:14
[7] ரோமர் 3:22, கலாத்தியர் 2:16
[8] எபேசியர் 6:15
[9] எபேசியர் 6:16
[10] எபேசியர் 6:17; 1 தெச. 5:8
[11] எரேமியா 29:11
[12] எபேசியர் 6:17
[13] 2 கொரி. 10:4,5
[14] எபேசியர் 6:18
[15] ரோமர் 8:37

1 கொரிந்தியர் 15:57
நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

எபேசியர் 6:11,12
நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

சங்கீதம் 118:8
மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.

எபேசியர் 6:14
சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்;

யோவான் 8:44
நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

ரோமர் 3:22
அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை.

கலாத்தியர் 2:16
நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே. கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே.

எபேசியர் 6:15-17
சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

1 தெச. 5:8
பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்.

எரேமியா 29:11
நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.

2 கொரி. 10:4,5
எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

ரோமர் 8:37
இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோமே.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au